கிடக்கும் நெருக்கடி நிலை பற்றி, அந்த நிலையைப் போக்குவதற்கு அரசு எடுக்கவேண்டிய நடவடிக்கைகளைப் பற்றி விவாதிக்க வேண்டுமென்று கோரி ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது அரசினுடைய அன்றாட அலுவல்களுக்கு உட்பட்ட காரணத்தாலும், இதை விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லாத காரணத்தாலும் இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

(ஆ) இராமநாதபுரம் மாவட்டத்தில் சில கல்லூரிகளில் மாணவர்கள் வேலை நிறுத்தம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திரு. டி. மார்டின் அவர்கள், இராமநாதபுரம், சிவகங்கை, திருப்பத்தூர், விருதுநகர், காரைக்குடி ஆகிய நகரங்களிலிருக்கும் கல்லூரிகளில் மாணவர்கள் வேலை நிறுத்தம் ஏற்பட்டிருப்பது பற்றிய அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை விவாதிக்க வேண்டுமென்று கோரி, ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார்கள். வேலைநிறுத்தம் குறித்து விவாதிக்க அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டியதில்லையென்று விதிகளில் உள்ள காரணத்தால் இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

(இ) சென்னை நந்தம்பாக்கத்திலுள்ள அறுவைச் சிகிச்சை கருவிகள் உற்பத்தித் தொழிற்சாலை கதவடைப்பும், அங்குள்ள பள்ளி மூடப்பட்டதும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திரு. சி. கோவிந்த ராசன் அவர்கள் சென்னை நந்தம்பாக்கத்திலுள்ள மத்திய அரசின் நிறுவனமான அறுவை சிகிச்சைக் கருவிகள் உற்பத்தித் தொழிற்சாலையின் நிர்வாகம் கதவடைப்பு செய்திருப்பதோடு, அங்கே இருக்கும் பள்ளிக்கூடத்தையும் மூடிவிட்டதனால் தொழிலாளர்கள் வேலை இல்லாமலும் மாணவர்கள் படிக்க முடியாமலும் இருக்கும் நிலையை விவாதிக்க வேண்டுமென்று ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். கதவடைப்பு, வேலை நிறுத்தம் போன்றவைகளை விவாதிப்பதற்காக அவையின் பிற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டியதில்லையென்று நம்முடைய விதிகள் கூறுகின்ற காரணத்தால், இதற்கும் நான் அனுமதி தர மறுக்கிறேன்.

அடுத்து, ஒரு . . . .

(3) **தகவல் கோரல்**

காவிரி ஆற்று நீர்ப் பங்கீடு பற்றிய விவர அறிக்கை குறித்து.

திரு. பி. ஜி. கருத்திருமன்: அண்மையிலே காவேரித் தண்ணீரை மைசூர் சர்க்கார் எடுத்துக்கொள்ள முடிவெடுத்த தாகவும் அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் சென்று விவாதித்ததாகவும்ம் சொல்லப்படுகிறது. தமிழ்நாட்டினுடைய பாசனம் பாதிக்கப்படும் வகையிலும், எதிர்காலத்தில், விவசாயம்